## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.95/2021

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 18 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகேசன் (PW-1) | வயது | : | 46 /2025 |
| க/த பெயர் | : | திரு. சிவஞானம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | குன்னியூர் | வட்டம் | | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்திற்கான மூல ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த மூல ஆவணம் என்பது எதுவென்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தை மூல ஆவணம் என்றேன். வா.சா.ஆ.1 ஆவணமான சிட்டா அது மூல ஆவணமாக கருத முடியாது என்றால் சரியல்ல. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் தாவா சொத்தினை நான் வேலி வைத்து அடைக்கும்போது தடுத்ததால் தாக்கல் செய்தேன். ஒவ்வொருவரும் குடியிருக்கும் வீட்டிற்கு எதிரிலுள்ள இடத்திற்கு அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி எனக்கு கொடுக்கப்பட்ட பட்டாவின்படி நான்கு புறமும் வேலி வைத்து அடைத்து பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

2) என்னுடைய இடத்திற்கு கிழக்கு புறம் யாருடைய இடம் உள்ளது என்றால் தார் ரோடு உள்ளது, மேற்கு புறம் ரமேஸ் இடமும், வடக்கே புறம்போக்கு இடமும், 4 ம் பிரதிவாதி ராஜ்குமார் சொந்தமான இடமும் உள்ளது, தெற்கே 2 ம் பிரதிவாதி சுப்ரமணிக்கு சொந்தமான இடமும் உள்ளது. இந்த நான்கெல்லை விபரத்தை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) எனது இடத்திற்கு கிழக்கில் 4 ம் பிரதிவாதியான ராஜ்குமார் வசித்து வரும் வீடும், ரோடும் வழக்கு சொத்தும் உள்ளது என்றால் சரியல்ல, ரோடு மட்டும்தான் உள்ளது. எனது இடத்திற்கு கிழக்கில் 4 ம் பிரதிவாதியான ராஜ்குமார் வசித்து வரும் வீடும்,

ரோடும் வழக்கு சொத்தும் உள்ளதை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) ராஜ்குமார் வசித்து வரும் வீடு அவரது தாத்தாவிற்கு சொந்தமான வீடு என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ராஜ்குமார் வசித்து வரும் வீட்டிற்கு எதிரிலுள்ள தாவா சொத்து அமைந்துள்ள இடம் 2ம் பிரதிவாதி சுப்ரமணிக்கு சொந்தமானது என்றால் இல்லை. எனக்கு சொந்தமான இடத்தில் நான்கு புறமும் வேலி வைத்து அடைத்து அனுபவம் செய்து வருவது போல் பிரதிவாதிகளும் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் நான்கு புறமும் வேலி வைத்து அடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

5) புல எண்.104/10 விஸ்தீரணம் 4 செண்ட் 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் வேலி வைத்து அடைக்கப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் அனுபவத்தில உள்ள சொத்தினை ஆக்கிரமிக்க நான் முயற்சி செய்ததால் தான் கோட்டூர் காவல் நிலையத்தில் பிரதிவாதி தரப்பில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணையில் இனி தொந்தரவு செய்யமாட்டேன் என மன்னிப்பு கேட்டேன் என்றால் தவறு.

6) எனது வீட்டிற்கு கிழக்குப்புறம் உள்ள பிரதிவாதிக்கு சொந்தமான வேலியை நான் பிரித்து கொளுத்தியதால் கோட்டூர் காவல் நிலையத்தில் பிரதிவாதி தரப்பில் புகார் கொடுக்கப்பட்டு அதன்பேரில் விசாரணை செய்ததில் நான் மன்னிப்பு கேட்டு என்னால் பிரிக்கப்பட்ட வேலியை சரிசெய்து தருவதாக சொல்லியதன் பேரில் அந்த புகாரானது முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.21 12:03:01 +0530

District Munsif

Mannargudi.